# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

## ஜனவரி 2024 (மடல் – 24) செய்தி - 1

தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்து போவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார். மீகா 2:13

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 9 |
| Children's Corner | 13 |
| வேத வினாக்கள் | 24 |
| கோதுமை மணி | 27 |
| துணுக்குகள் | 29 |
| ஆலய பக்கம் | 31 |

## புதிய ஆண்டின் புதிய பயணம்

**“நீங்கள் தீவிரித்துப் புறப்படுவதில்லை நீங்கள் ஓடிப் போவதுமில்லை. கர்த்தர் உங்கள் முன்னே போவார் இஸ்ரேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார;” (ஏசாயா 52:12).**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்திலே புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய ஆண்டு நமக்கும் நமது குடும்பத்திற்கும் திருச்சபைக்கும் தேசத்திற்கும் ஆசீர்வாதமான நாட்களாகக் காணப்பட ஆண்டவர் அருள் செயவாராக. புதிய ஆண்டிற்குள் மகிழ்ச்சியோடு நுழைந்திருக்கிற நமக்கு, புதிய ஆண்டின் கிறிஸ்தவ வாழ்க்கைப் பயணம் எப்படி இருக்குமோ என்ற சிறிய அச்சம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஆனால் இஸ்ரவேல் மக்களின் எகிப்தின் விடுதலைப் பயணமும், பாபிலோனின் விடுதலைப் பயணமும் நமக்குப் புதிய நம்பிக்கையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.

எகிப்தின் அடிமை வாழ்வின் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களை விடுவிக்க கர்த்தர் இறங்கி வந்தார். அதே கர்த்தர் இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். புதிய ஆண்டின் புதிய கிறிஸ்தவ வாழ்க்கை பயணத்திற்குள் நம்மை அழைத்துச் செல்கிறார்.

கிமு 6-ம் நூற்றாண்டு, உலக வரலாற்றிலே மிக முக்கியமானதோர் காலக்கட்டம். பல நாடுகளும், சமயங்களும் வீழ்ச்சியும், வளர்ச்சியும் அடைந்த காலம். யூத வரலாற்றிலும் இது முக்கியமான காலம். நினைவு காலத்தில் யூதர்கள் பாபிலோனுக்குக் கைதிகளாகக் கொண்டு போகப்பட்டார்கள். பாபிலோன் வாழ்க்கை அவர்களுக்கு இக்கட்டும் துன்பமும் நிறைந்த வாழ்க்கை. ஒரு பாடல் பாடுங்கள் என்று அழைப்பு வந்த போது, தங்கள் கீத வாத்தியங்களைச் செடிகள் மீது வைத்து விட்டு எருசலேமை நினைத்து பாபிலோன் ஆற்றங்கரையிலிருந்து அழுது கொண்டிருந்தார்கள். அதிலும் தங்களின் சமயம் அழிந்து விடுமோ என்ற கவலை அவர்களை மிகவும் வருத்தியது. கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டதோர் ஜனம். அவரால் பரிசுத்தப்படுத்தப்பட்ட எருசலேம் நகரம். அவரால் அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீது கோத்திரத்தின் அரசன், எருசலேம் தேவாலயம். அதை மையமாகக் கொண்ட தொழுகை இவை யாவும் இஸ்ரவேல் மக்களின் சமய நம்பிக்கைகளின் அஸ்திபாரம். இவை இல்லாதோர் சமய வாழ்க்கைப் பற்றி, இஸ்ரவேல் மக்கள் சிறையிருப்புக்கு முன் நினைத்துப் பார்த்ததேயில்லை.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஏசாயா தீர்க்கன் தோன்றுகிறார். இஸ்ரவேல் மக்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையும் ஊட்டுகிறார். கர்த்தர் (யாவே) எல்லாம் வல்லவர், எங்கும் இருக்கிறார். இந்த உலகத்தையும் உலகத்திலுள்ள எல்லாவற்றையும் படைத்த அவருக்கு உங்களை விடுவிப்பது மிகவும் எளிது (ஏசாயா 45:12,13). கடந்த கால வரலாற்றிலே செயலாற்றிய அதே கர்த்தர் இன்றும் செயலாற்றுகிறார். உங்களுக்கு எதிராக இருக்கின்ற எல்லா தடைகளையும் உடைத்து உங்களைச் சொந்த நாட்டிற்கு அழைத்துச் செல்வார். நீங்கள் தீவிரித்து புறப்படுவதில்லை, நீங்கள் ஓடிப் போகிறவர்கள் போல் ஓடிப் போவதில்லை. கர்த்தர் உங்கள் முன்னே போவார் இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார் (ஏசாயா 52:12).

எகிப்தின் விடுதலைப் பயணம் இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கையில் கடவுள் ஆற்றிய மகத்தான செயலாகும். விருந்தினர்களாக எகிப்திற்குச் சென்ற இஸ்ரவேலர் அடிமையாக்கப்பட்டார்கள். அங்கிருந்து கர்த்தர் தமது வலிமை மிக்க கரத்தால் அவர்களை விடுவித்தார். இந்த விடுதலைப் பயணத்தைத் தங்கள் வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்துக்கொள்ள பஸ்கா பண்டியையும் ஏற்படுத்திக் கொடுக்கிறார் (யாத்12:14) ஆனால் அதைவிட ஒரு சிறப்பானதோர் புதிய பயணம் விடுதலைப் பயணத்தை ஏசாயா அறிவிக்கிறார். எகிப்தின் விடுதலைப் பயணத்திலே இஸ்ரவேல் மக்கள் இரவோடு இரவாகத் தீவிரமாக புறப்பட்டார்கள். பார்வோன் மனம் மாறுவதற்கு முன்பாகவே ஓடி விட வேண்டும் என்று எண்ணி வேகமாக புறப்பட்டார்கள். அப்பம் சுடுகின்ற மாவு புளிப்பதற்கு கூட நேரமில்லாமல் தீவிரமாகவும், வேகமாகவும் ஓடினார்கள் (உபா 16:13) ஆனால் இந்த பாபிலோனின் விடுதலைப் பயணம் அமைதியான பயணம் அவசரமாக ஓடிப் போக வேண்டியதில்லை. ஏனெனில் அரசனே அவர்களை அனுப்பி வைக்கிறார் (எஸ்றா 1:1-5). எகிப்தின் விடுதலைப் பயணத்திலே மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் இஸ்ரவேலை வழி நடத்தியது. ஆனால் புதியப் பயணத்தில் கர்த்தரே அவர்களுக்கு முன் செல்லுகிறார். கடந்த கால வரலாறுகளில் செயலாற்றிய அதே கர்த்தர் நிகழ்காலத்திலும் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். நம்பிக்கை இழந்து சோர்ந்திருந்த இஸ்ரேல் மக்களை உற்சாகப்படுத்திய ஏசாயா, இந்த புதிய ஆண்டில் நம்மையும் உற்சாகப்படுத்துகிறார். கடந்த ஆண்டு கிறிஸ்தவப் பயணத்தில் பிரச்சனைகளையும் துன்பத்தையும் சந்தித்து இருக்கலாம். ஆனால் தடைகளை நீக்கிப் போடுகிற கர்த்தர் நமக்கு முன் சொல்கிறார் (மீகா 2:13).

இப்புதிய ஆண்டின் புதிய பயணத்தில் கர்த்தரே நமது வழிகாட்டியாயிருக்கிறார். நான் உனக்கு முன்னதாகப் போய் கோணலானதை செவ்வையாக்குவேன் என்கிறார். புதிய ஆண்டில் கிறிஸ்துவ வாழ்க்கை பயணம் எப்படி இருக்குமோ என்கிற பயம் நமக்கு தேவையில்லை. எகிப்தின் அடிமைத்தழையிலிருந்தும், பாபிலோனின் சிறையிருப்பிலிருந்தும் விடுவிக்க வலிமை மிக்க ஆண்டவர் நம்மோடிருந்து இப்புதிய ஆண்டின் புதிய பயணத்திலும் நம்மை வழி நடத்துவாராக. ஆமென்.

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
*Rev. Dr. A. Samuel*

# ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த ஆண்டுகள் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய ஆண்டு நமக்கும், நம்முடைய குடும்பங்களுக்கும், திருச்சபைகளுக்கும், உலக நாடுகள் அனைத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக."கர்த்தர் உனக்கு பரிபூரண நன்மை உண்டாக கட்டளையிடுவார்" உபாகமம் 28:11. இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியை கடந்து உங்களுக்கு கொடுப்பேன் என்று உறுதிமொழியாக கூறப்பட்ட நாட்டை அடையும் முன் மோசே பேசிய இறுதி அருளுரைகள் அடங்கிய புத்தகம் உபாகமம். இந்த புத்தகத்தில் இறைவன் மக்களுக்கு, மோசேயின் வழியாக கொடுக்கப்பட்ட வார்த்தைகள் சொல்லப்பட்டுள்ளது. இந்த புத்தகம் கீழ்ப்படிகிறவர்களுக்கு உண்டாகும் ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாதவர்களுக்கு உண்டாகும் தண்டனையையும் கூறுகிறது. சட்டப்பகுதியும், வரலாற்றுப் பகுதியும் இணைத்து சொல்லப்பட்டுள்ளது. கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவேண்டியதின் அவசியமும் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்தும், அவர் சொல்படி வாழ்வதே ஆண்டவருக்குப் பிரியமான வாழ்க்கையாகும். கீழ்ப்படிதல் குறித்து பழைய ஏற்பாட்டில் சவுல் செய்தச் செயலைக் காண்கிறோம். இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என தீர்க்கதரிசியான சாமுவேலிடம் முறையிட்டனர். அதின்படி தேவனிடம் விண்ணப்பம் செய்து, ஆண்டவரின் உத்தரவின் பெயரில் இஸ்ரவேலின் ராஜாவாக சவுலை சாமுவேல் அபிஷேகம் பண்ணுகிறார். தேவன் சவுல் அரசனிடம் அமிலேக்கியரை முற்றிலுமாக அழிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். ஆனால் சவுல் சிறப்பானவற்றை அழிக்காமல், தேவனுக்கு பலியிட வேண்டும் என்று விட்டு வைத்தான். இதனால் தேவன் சவுலின் மேல் கோபம் கொண்டு செல்கிறார்,

"பலியை பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்;" என்கிறார் (1சாமுவேல் 15:22). ஏனெனில் பழைய ஏற்பாட்டு காலங்களில் ஜனங்கள் கடவுளுக்குப் பலியிடுவதற்கு அதிக கவனமும், முக்கியத்துவமும் கொடுத்தார்கள். ஆனால் தேவன் கொடுத்திருக்கின்ற கட்டளைகளை

கடைபிடிப்பதில் கவனம் செலுத்த மறந்தார்கள். ஆனால் பலியைவிட, கடவுளுக்கு கீழ்ப்படிதல் அவசியம் என்பதை ஆண்டவர் வலியுருத்துகிறார். கீழ்ப்படிய மறுத்த சவுலை தேவன் ராஜாங்கத்திலிருது தள்ளிவிட்டு, தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்கிறார். நம் வாழ்வில் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, கீழ்ப்படியும்போது இறைவன் கொடுக்கும் பரிபூரணமான நன்மையை பெற்றுக்கொள்ள முடியும். உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் உபாகமம்(28:1). பரிபூரணம் என்பது முழுமையை குறிக்கிறது. இந்த புதிய ஆண்டில் ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்படியும் பொழுது, ஆண்டவரிடமிருந்து முழுமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறோம். தகுதி இல்லாத நம்மீது ஆண்டவர் வைத்திருக்கின்ற அளவுகடந்த அன்பிற்காக, நன்றிசெலுத்தி கீழ்படிந்து வாழும்பொழுது, உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார். (உபாகமம் 28:11) என்கின்ற ஆசீர்வாதத்தை இந்த புதிய ஆண்டில் நமக்குத் தந்து, வழிநடத்துவாராக.

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

***மீட்பரின் பணியில்***
***Mrs. S. ஜெபா சாமுவேல்***
**ஆயரம்மா**

## புதிய ஆண்டில் புதிய தொடக்கம்

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் என்று 2 கொரி.5:6- ல் வாசிக்கிறோம். ஆகவே நாம் கடந்து வந்த பழைய காலங்கள் அனுபவங்கள் நமக்கு கலக்கம் தருவதாக இருந்தாலும், நாம் நடந்து செல்கிற நிகழ் காலம் நம்மை நெருக்குவதாக இருந்தாலும், நாம் பிரவேசிக்கிக்கிற இந்த புதிய ஆண்டு நமக்கு புது வாழ்வு தருவதாக அமையும் என்று தேவனுடைய வார்த்தை நம்மை உற்சாகப்படுத்துகிறது. ஏனெனில் நம்முடைய எதிர்காலத்தை முற்றும் காண்கிற தேவன் மேல் நாம் விசுவாசம் வைத்துள்ளோம். அதின் ஒவ்வொரு நாளிலும் நாம் எதிர்கொள்ள போகும் சவால்களையும் அதன் தேவைகளையும் அவர் அறிந்திருக்கிறபடியால், நாம் கலங்கத் தேவையில்லை. இதை அப்போஸ்தலனாகிய பவுல் நன்கு அறிந்துள்ளார். ஆகவேதான், நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் என்று நம்பிக்கையளிக்கும் வார்த்தைகளினால் அவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

**<u>புதிய நம்பிக்கை</u>**

‘இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுது அது தோன்றும். நீங்கள் அதை அறிவீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.’ ஏசாயா 43:19 .. ஆம்! நம்முடைய கர்த்தர் சகலவற்றையும் புதிதாக்குகிறவர். நம்முடைய ஆண்டவர் செய்கிற ஒவ்வொரு காரியமும் எப்போதும் புதிதாகவும், ஆச்சரியமானதாகவும் இருக்கும். ஆகவே தான் அவர் சொல்லுகிறார் நான் வனாந்தரத்தில் வழியையும் அவாந்தரவெளியில் ஆறுகளையும் உண்டாக்குவேன். இன்றைய தினத்தையும், நாம் காணாத எதிர்காலத்தையும் நம்பிக்கையோடு தேவனுடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கும் பொழுது, நம் வாழ்வை எதிர்நோக்கி வரும் எக்காரியங்களைக் குறித்தும் நாம் கவலைப்படத் தேவையில்லை. நாம் தேவனோடு நடக்கிறோம். நமக்கு முன் இருப்பவைகளை அவர் அறிந்திருக்கிறார். அவற்றைக் கையாள அவர் பெலமுள்ளவராய், ஞானம் உள்ளவராய் இருக்கிறார்.

**<u>புதிய வாழ்வு</u>**

‘அவர்கள் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்.’ எசேக்கியேல் 11:19. இறைவனை பற்றிக்கொண்டு நாம் வாழும் பொழுது , ஒரு புதிய விடியல் நம் வாழ்க்கையில் ஏற்படுகிறது . ஆண்டவருடைய உறவில் நாம் வளர்கிறோம், அது நமக்கு புதிய ஆவியை கொடுத்து, அடிமைத்தனத்தின் எல்லா கட்டுகளையும் உடைத்து, புத்திர சுவிகாரத்தின் சுதந்தரத்தை நாம் பெற்றுக்கொள்ள நம்மை வழிநடத்தும்.

**_புதிய கிருபை_**

'நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்.' புலம்பல் 3:22,23 கர்த்தருடைய கிருபை என்பது ஆச்சரியமான ஒன்றாகும். ஒன்றுமில்லாத நிலையில் நம்மைத் தேடி வருகிற ஆசீர்வாதங்களுக்கு பெயர்தான் கிருபை. காரணம் நம் எல்லாருக்காக இயேசு சிலுவையில் விலையேறப்பெற்ற ரத்தத்தை சிந்தி நம்மை மீட்டுக் கொண்டபடியால் அக்கிருபை நம்மைத் தேடி வருகிறது. புதிய கிருபைகளை எதிர்பாருங்கள். இதைப்பெற்றுக் கொள்வதற்கு காலை நேரத்தில் கர்த்தரை சந்திக்க தீர்மானியுங்கள். ஏனெனில் நேற்றுப் பெற்ற கிருபையை இன்றைக்கு சார்ந்துக் கொள்வதைவிட அந்தந்த நாளுக்குரிய கிருபையை பெற்றுக் கொள்ள காலையில் அவருடைய முகத்தைப் பாருங்கள். பரிசுத்த வாழ்க்கைக்கு, ஜெப வாழ்க்கைக்கு, வெற்றியுள்ள வாழ்க்கைக்கு தேவ கிருபை தான் அவசியம் தேவை. உங்கள் சுயபெலத்தை, உலக ஞானத்தை, நீங்கள் பெற்ற அனுபவத்தை சார்ந்து கொள்ளாமல் ஒவ்வொரு நிமிடமும் அவருடைய புதிய கிருபையை எதிர்பார்ப்பீர்கள் என்றால் நிச்சயம் கர்த்தர் தம்முடைய புதிய கிருபையினால் நிரப்புவார்.

மத்தேயு 14ம் அதிகாரத்தில் பேதுரு ஆண்டவராகிய இயேசுவை நோக்கி ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்' என்றான். அதற்கு அவர்: 'வா' என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்'. (மத்தேயு 14 : 28, 29) இயேசுவின் பேரில், அவர் சொன்ன வார்த்தையின் பேரில் சார்ந்து பேதுரு தண்ணீரின்மேல் நடந்தான். இதுவே விசுவாசித்து நடப்பது. நாம் ஆண்டவராகிய இயேசுவை நோக்கி, வேத சத்தியங்களை முழுமையாய் நம்பி அதின் அடிப்படையில் நடக்கும்போது அது விசுவாசத்தின் நடை. ஆனால் அதே பேதுரு தரிசித்து நடக்க ஆரம்பித்தவுடன் என்ன நடக்கிறது பாருங்கள். காற்று பலமாயிருக்கிறதைக்கண்டு, பயந்து அமிழ்ந்துப்போக ஆரம்பித்தான். தரிசித்து நடப்பது உன்னைக் கீழே கொண்டு செல்லும். தரிசித்து நடப்பவன் எப்போதும் மேலே உயரமுடியாது. விசுவாசித்து நடப்பவனின் பார்வை எப்போதும் மேல் நோக்கியே (தேவனை நோக்கியே) இருக்கும்.

ஆகவே, மனச்சோர்வுக்கு இடங்கொடாதிருங்கள்.

☞ ஜெபிப்பதிலே சோர்வு வேண்டாம்; தேவன் நிச்சயம் நியாயஞ்செய்வார். லூக்.18:1-8

☞ நன்மைசெய்கிறதிலே சோர்வு வேண்டாம்; ஏற்றக்காலத்தில் பலனை அறுப்பீர்கள். கலா.6:9

☞ ஆபத்துக் காலத்திலே சோர்வு வேண்டாம்; உங்கள் பெலனைத் தக்க வைத்துக் கொள்ளலாம்.நீதி.24:10

☞ தேவனுடைய சிட்சையிலே சோர்வு வேண்டாம்; அவர் இன்னும் நம் மீது அன்பாயிருக்கிறார். நீதி.3:11,12

ஆபிரகாமைப் பார்த்து தேவன், 'நான் சர்வவல்லமையுள்ள தேவன்' என்று சொன்னார். இந்தப் புதிய ஆண்டில், தேவன் சர்வவல்லவர் என்ற விளங்குதலோடு நாம் பிரவேசிப்போம். அவர் சகலத்தையும் உண்டாக்கி அனைத்தையும் ஆளுகை செய்கிற தேவன். ஆபிரகாமைப் போல், இந்த புதிய ஆண்டில் தேவன் விசேஷித்த விதத்தில் நம்மை ஆசீர்வதிப்பார். தேவனுக்கென்று வாழவும், அவருடைய மகிமைக்கென்று பிழைக்கவும் நம்மை ஒப்புக்கொடுப்போம். இந்த ஆண்டில் பெரிய காரியங்களை கர்த்தர் நமக்கு செய்வார். தேவனுடைய நாமம் மகிமைப்படும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே உங்களனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைச் சொல்கிறேன். இந்தப் புத்தாண்டிலே ஆண்டவருடைய ஆசீர்வாதம் உங்களோடுகூட இருந்து பெரிய காரியங்களைச் செய்வதாக.

கிறிஸ்துவில் அன்புடன்,
**Jayachandra Raja**

பிப்ரவரி மாத தலைப்பு

# உறவுகளை சீர்ப்படுத்தும் காலம்
# A Time of Reconciliation

## விசுவாசத்தோடு கூடிய பயணம்

விடுமுறை நாட்களில் நாம் வெளியூர்களுக்கோ, வெளி நாடுகளுக்கோ செல்லத் திட்டமிடும்போது, நாம் அநேக காரியங்களைக் குறித்து விசாரிக்கிறோம். போகும் இடத்திற்கான வழி, தங்கும் இடம், அங்குள்ள கால சூழ்நிலை, தேவையான பணம் என அடுக்கிக் கொண்டே போகலாம். அனைத்து காரியங்களும் தெளிவாக இருந்தால் தான், நாம் சிரமப்படாமல் அங்கு சென்று, அங்கு கழிக்கும் நாட்களில் சந்தோஷமாக இருக்க முடியும்.

நம்முடைய வாழ்க்கை பயணமும் கிட்டத்தட்ட அப்படித்தான். நாமொரு நாடோடி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய பயணம் தேவனுடைய பரம ராஜ்யத்தை நோக்கி இருக்கிறது. அந்த பரம ராஜ்யத்தை நோக்கி செல்லும் நாம், நம் பயணம் எத்தகையதாய் இருக்க வேண்டும் என்று சற்றே சிந்திப்போம்.

**தேவனின் ஆலோசனை**

தேவன் ஆபிராமை அழைத்து கானானுக்கு போகும்படி கூறியபோது, அவன் கீழ்ப்படிந்து தனக்குரிய உறவுகள் மற்றும் அனைத்துக் காரியங்களையும் விட்டு விட்டு புறப்பட்டான். ஊரானது கல்தேயர் தேசத்தில் அக்காலத்தில் ஒரு நல்ல பட்டணமாக இருந்தது. வணிகம் மற்றும் அனைத்திலும் சிறந்து விளங்கிய ஊரை விட்டு தேவனின் அழைப்புக்கு கீழ்ப்படிந்தான் ஆபிராம். தேவன் அவனை ஆசீர்வதிப்பதாக கூறியதை முழுமையாக விசுவாசித்தான்.



கானான் வந்து சேர்ந்த பின் பஞ்சம் உண்டானபோது, ஆண்டவரிடம் ஆலோசனை கேளாது எகிப்துக்குப் போகிறான். அப்போது தன் உயிரை காப்பாற்ற, பொய் கூற வேண்டியதாயிற்று. கர்த்தர் இடைபட்டு பார்வோனை கடிந்து கொண்டு, ஆபிராமின் மனைவியை அவன் கையிலிருந்து காப்பாற்றினார்.

ஆண்டவருக்கு கீழ்ப்படிந்து ஊரை விட்டு வந்திருந்த போதும், இடையில் நெருக்கம் ஏற்பட்டபோது தேவனிடம் ஆலோசனை கேட்காது தவறான இடத்துக்கு பயணம் செய்தபோது, தன் மனைவியையே இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. தேவன் கிருபையாய் சாராயை பார்வோனின் கையில் இருந்து காப்பாற்றினார்.

நம்முடைய வாழ்க்கையிலும் நாம் தேவனுடைய வழிநடத்துதலை உணர்ந்து, அவரின் ஆலோசனையை கேட்டபின் தான் அடியெடுத்து வைக்க வேண்டும். உலகப்பிரகாரமாக செழிப்பாகத் தோன்றுகிற இடத்தை நோக்கி, நம் பயணம்

இருக்குமாயின் முடிவில் நாம் கஷ்டப்பட நேரிடும். லோத்தின் தெரிந்தெடுப்பும் அவனுக்கு மிகப்பெரிய இழப்பைக் கொடுத்தது. வாழ்க்கையில் நாம் எடுக்கும் தீர்மானங்கள் எதுவாயிருந்தாலும், சிறிய காரியமோ, பெரிய காரியமோ, நம் அறிவை நம்பாது, சூழ்நிலைகளை நோக்காது, தேவனின் பாதத்தில் அமர்ந்து, அவர் சித்தத்தை அறிந்து முடிவு எடுக்க வேண்டும். அப்போது தேவ பிரசன்னம் நம்மை காக்கும். வாழ்க்கைப் பயணம் இனிதாகும்.

**தேவனோடு ஒரு சந்திப்பு**



தேவ ஆலோசனையை பெற்று அடியெடுத்து வைக்க வேண்டுமெனில், நம் தனிப்பட்ட வாழ்க்கையில் தேவனை சந்தித்திருக்க வேண்டும். அவர் நம்மை ஆளுபவராக இருக்க வேண்டும். அப்போது தான் நம் மனம் அவர் ஆலோசனையை நாடும். பவுல் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கிறிஸ்தவர்களை துன்பப்படுத்திய சவுல், தேவனால் சந்திக்கப்படுகிறார். அதன் பின் அவருடைய வாழ்க்கை நாம் அறிந்தபடி முற்றிலுமாக மாறி விட்டது. வாழ்க்கைப் பாதையில் நேர் திருப்பம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பவுல், கிறிஸ்துவுக்காக பட்ட பாடுகள் ஏராளம். கிறிஸ்துவை அறிவிப்பதே அவருடைய முழு வாஞ்சையாயிருந்தது. அநேக உள்ளங்கள் இயேசுவண்டை வர பவுல் காரணமாயிருந்தார்.

நம்முடைய வாழ்க்கையும் பரலோக ராஜ்யத்தை கட்டும் வாழ்க்கையாக மாற, தேவன் நம் வாழ்வில் இடைபட வேண்டும். அவர் சத்தத்துக்கு முழுக் கீழ்ப்படிதல் வேண்டும். அப்படி செய்யும்போது, இவ்வுலகில் நம்மோடு பயணம் செய்யும் மக்களும் நம்மூலம் இயேசுவைக் கண்டு கொள்ள நம் பயணம் உதவி செய்யும்.

புதிய ஆண்டில் நாம் எடுக்கும் ஒவ்வொரு அடியும் தேவ சித்தப்படி இருக்கட்டும். அப்பொழுது மனுஷர் நம்முடைய நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தில் உள்ள பிதாவை மகிமைப்படுத்தும்படி, நம்முடைய வெளிச்சம் அவர்கள் முன் பிரகாசிக்கும். நம் வாழ்க்கைப் பயணம் மற்றவர்களின் வாழ்க்கைப் பாதைக்கு ஒளியூட்டுவதாக இருக்க ஆண்டவர் அருள்புரிவாராக!

**ஜெபசீலி ஆசீர்**

## சூனேமில் கனம் பொருந்திய பெண் [2 ராஜா. 4]

"கனம் பொருந்தியவள்" என்ற பட்டத்தைப் பெற்ற பெண். சூனேமில் வாழ்ந்தாள்.

**தேவ மனிதனை வருந்தி உபசரித்தவள்:**

எலிசா தீர்க்கதரிசி சூனேமுக்கு போயிருந்தபோது, தன் வீட்டிற்கு வந்து விருந்து சாப்பிடும்படி வருந்திக் கேட்டுக்கொண்டாள். எப்போதெல்லாம் இந்த ஊருக்கு வருகிறீர்களோ, அப்போதெல்லாம் வரவேண்டும் என்ற சூனேமியாளின் உபசரணையை எலிசா ஏற்றுக் கொண்டான்.

**தேவ மனிதனான எலிசாவை பரிசுத்தவான் என்று கண்டு கொண்டாள்:**

தன் வீட்டிற்கு வந்த ஊழியக்காரரை பகுத்தறிந்து, ஞானமாய் செயல்பட்டவள்.

**தேவ மனிதன் தங்குவதற்கு அறை கட்டினவள்:**

எலிசா சூனேமுக்கு வரும்போதெல்லாம் தங்கவைக்க இடம் வேண்டும் என்று அறிந்தவள், தன் வீட்டிலே தனி அறை கட்டி உபசரித்தாள். தேவைகளை முன்னறிந்து செயல்பட்டாள் (2ராஜா. 4:10). கட்டில், மேசை, நாற்காலி, குத்து விளக்கு எல்லாவற்றையும் வைத்தாள்.

**கணவனை மதித்த கனம் பொருந்திய மனைவி:**

குடும்பத்திற்கு தலைவன் கணவன் என்பதை அவள் மறக்கவில்லை. சூனேமியாளின் கணவனுடைய திறமை, அறிவை விட இவளுடைய செயல்பாடு சிறந்ததாக இருந்தாலும், கணவனை மதித்து வாழ்ந்தவள்.

**தன் தேவைகளை வெளியே சொல்லாதவள்:**

சூனேமியாளுக்கு குழந்தையில்லாமல் இருந்தபோதும், அவள் தேவையை சொல்லவேயில்லை. உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோதும் தன் தேவையை சொல்லவில்லை. நான் என் ஜனங்கள் மத்தியில் சுகமாகத்தான் வாழ்கிறேன் என்றாள். ஆச்சரியமான பெண்! இவளுக்கு குழந்தை இல்லை என்பதை தன் வேலைக்காரன் மூலம் அறிந்துகொண்ட எலிசா, ஒரு பிராண உற்பத்தி காலத் திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய் என்று கூறினான். அத்தீர்க்கதரிசனத்தின்படி பத்து மாதத்திலே கர்த்தர் ஒரு மகனை கொடுத்தார்.

**சூனேமியாளின் பணிவு:**

தன் மகன் வளர்ந்து ஒருநாள் வியாதிப்பட்டு மரித்துவிட்ட சூழ்நிலையில், எலிசாவிடம் போய் அவன் காலைப் பிடித்துக் கொண்டாள். எலிசா ஜெபித்து, செத்த பிள்ளை உயிர் பெற்றது. பிள்ளை பிழைத்தபின் எலிசாவின் பாதத்தில் விழுந்து தரைமட்டும் பணிந்தாள்.

**சூனேமியாளின் கணவன்:**

தன் மனைவி செய்யும் நற்காரியங்களுக்கு, கணவனின் ஒத்துழைப்பு இருந்தது. தீர்க்கதரிசியை உபசரிக்கும்போது எந்த குறையும் சொல்லவில்லை. சூனேமியாளின் தலைமைத்துவ திறமையை அறிந்து, அங்கீகரித்து, அதற்கேற்றபடி நடந்தான் என்பது தெரிகிறது.

**நாம் கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- ✓ கனம் பொருந்திய பெண்ணாகத் திகழவேண்டும்.
- ✓ உபசரிக்கும் குணம் காணப்படட்டும்.
- ✓ கணவனை மதிக்கும் குணம்.
- ✓ தன் குறையை வெளிப்படுத்தாத அடக்க குணம்.
- ✓ விசுவாசத்தை தளரவிடாதப் பெண்.
- ✓ தன மனைவியை அலட்சியப்படுத்தாத கணவன்.

சூனேமியாளின் குணங்கள், இந்தப் புதிய ஆண்டில் நம்மிலும் காணப்பட்ட ஜெபிப்போம்.

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு

# CHILDREN'S CORNER

Dear Children,

The theme this January is "**NEW JOURNEY IN NEW YEAR**".



The Bible is full of Journeys – Abraham, the Exodus, Paul's missionary journeys…

Very often we say things like, "In my faith journey, God has used so many circumstances to teach me about trusr", or , "I've come a long way in my faith since joining junior church."

## 'JOURNEY' AS A METAPHOR FOR 'OUR FAITH'

1. "Journey" focuses on the process of getting there, not the arrival.
   Christians are being transformed into Christ's image
2. A journey implies changes, transitions, challenges and adventures.
   I need to be open to change myself and grow in Christ.
3. Many journeys involve travelling with others.
   I need to pay attention to the travel companions God has given me.
4. We often need to lighten our load when we travel.
   In our Faith journey, we talk to Jesus - share our burdens, let go of our fears and change our attitudes.




The biggest and **Most Significant Journey Story In The Bible** is Jesus leaving heaven and coming to earth for our sake, to live and die and be raised again so that we can live in him.

Jesus asks us to journey with him. He asks us to trust him in our journey. The Holy Spirit works in us so we can grow into Jesus' image on the journey and reach our journey's end.



This new year, let us ask ourselves where is our journey headed? Our response should be – Towards Jesus with the help of the Holy Spirit! He alone is the Way, the Truth… to Eternal Life.

If that's not our response, we need to make a "U" turn right now. And the New Year is a good time to start.

## MAJOR BIBLE EVENTS #1 CREATION

The book of Genesis describes God's perfect and complete creation in the beginning.

God created all things in six days and rested on the seventh.





## Teen Thought – Creation or Evolution??



**Point to Ponder -** If everything in the universe came as a result of a random Big Bang - **Who caused the Bang?**
We can only answer this through a journey of Faith, in the Word of God!

## WHAT DOES THE BIBLE SAY?

- ✓ "In the beginning, God created the heavens and the earth" (Genesis 1:1).
- ✓ "In the beginning was the Word… All things were made through him, and without him was not anything made that was made" (John 1:1-3).




- ✓ "Worthy are you, our Lord and God… for you created all things, and by your will they existed and were created" (Revelation 4:11).
- ✓ God's glorious handiwork can be seen in what he made (Psalm 19:1)

**BIBLICAL CREATION IS TRUE BECAUSE THE ULTIMATE AUTHORITY ON THE SUBJECT—GOD—SAID SO.**

# CHILDREN IN THE BIBLE #1

## ISAAC



Abraham and Sarah were blessed by a baby boy in their old age. They called him Isaac.

Once day God decided to test Abraham's faith and asked him to sacrifice Isaac. Abraham took Isaac to the mountain as God instructed. There Abraham left the servants at the foot of the mountain, and climbed the mountain alone with Isaac.



Isaac carried the wood, and noticed that they only had the coal and the knife for the sacrifice. Abraham answered that God would provide the lamb.



Upon reaching the spot, Abraham began to build an altar. Once the altar was built, he put wood on it, tied Isaac up, and placed him on the altar. Then Abraham took out his knife and was about to sacrifice Isaac, when an angel of God appeared and said - "Don't harm Isaac, Abraham. You have shown your honor and obedience to God."






Just then Abraham saw a ram caught in the bushes. Abraham sacrificed the ram as an offering to God, and named the place – "The Lord Provides." The angel of God spoke a second time and blessed Abraham and Isaac. God promised to give as many descendants as there were stars in the sky or grains of sand on the seashore.

The Bible does not tell us how old Isaac was at the time of the story. But if he was old enough to carry the wood for the sacrifice, he could have fended off his 100+ year old father. Both Abraham and Isaac demonstrated TRUST in God on that day. Isaac trusted his Father's words, and Abraham trusted that God would meet their needs.

**Daily Application** - We too can Trust Jehovah Jireh, our God, to provide for all our needs, all through this year.


## SAYING IT WITH PICTURES…

**WRONG TURN** — A Joyful 'toon by Mike Waters




If we confess our sins, he is faithful and just and will forgive us our sins and purify us from all unrighteousness.
– 1 John 1:9 NIV

**A NEW LEAF?** — A Joyful 'toon by Mike Waters




We were therefore buried with him through baptism into death in order that, just as Christ was raised from the dead through the glory of the Father, we too may live a new life.
— Romans 6:4 NIV


## TINY TOTS SECTION


### COLOR IN…



I am with you always.
(Matthew 28:20 NIV)

# FOLLOWING JESUS EVERYDAY




**GOD WILL PROVIDE FOR OUR NEEDS...**


# GOD'S BEAUTIFUL WORLD

## Spot the Differences for God Made the Animals

Compare the picture on the top with the picture on bottom. Circle the 17 things that are different.



## NUMBER THE BOXES IN THE ORDER THAT GOD CREATED THE HEAVENS AND THE EARTH



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "Genesis Chapter 1; 21; 22"

1. In the Beginning, who created Heaven and the Earth?

| | |
|---|---|
| a. Adam | b. Moses |
| c. God | d. Heavenly beings |

2. What did God gather together into one place, and then what appeared?

| | |
|---|---|
| a. Sheep and Camels. | b. Water and Dry Land. |
| c. Light and Darkness. | d. People and Angels. |

3. On what day did God say – "Let the fruit tree yield fruit according to its kind?"

| | |
|---|---|
| a. First Day | b. Second Day |
| c. Third Day | d. Fourth Day |

4. In whose image did God create man?

| | |
|---|---|
| a. Image of God. | b. Image of a Drawing. |
| c. Image of a Doll | d. Image of the Angels. |

5. To whom did God say –You will have dominion over every living thing that moves?

| | |
|---|---|
| a. The Trees | b. The Birds |
| c. The Animals | d. To the Man. |

6. How old was Abraham when Isaac was born?

| | |
|---|---|
| a. 60 | b. 75 |
| c. 85 | d. 100 |

7. What did God tell Abraham to do to Isaac?

| | |
|---|---|
| a. Appoint him as Successor . | b. Anoint him as Priest. |
| c. Offer him as Sacrifice. | d. Train him for Battle. |

8. Where did Abraham take Isaac?

| | |
|---|---|
| a. Mount Tabor | b. Mount Sinai |
| c. Mount Gerizim | d. Mount Moriah |

9. How many days did Abraham wait, after receiving instructions from God?

| | |
|---|---|
| a. 7 Days | b. 4 Days |
| c. 2 Days | d. 0 Days |

10. What promise did the angel deliver, in response to Abraham's action?


| | |
|---|---|
| a. "I will surely bless you" | b. "You will live long". |
| c. "I will provide your sacrifice" | d. "You will have another son" |

11. What did Abraham call the place, on the mountain top?

| | |
|---|---|
| a. The Lord will answer. | b. The Lord will send an angel. |
| c. The Lord will provide. | d. The Lord will provide. |


12. Where did Abraham go next?

a. Beersheba b. Egypt c. Canaan d. Ur




**When my faith is "rooted" in Jesus Christ, He can help me make good choices (Colossians 1:23; 2:6–7).**

Color the picture. Trace the paths from the pictures of good choices to the ends of their roots.



## MARY JONES' JOURNEY



Many years ago, a young girl lived with her parents in a small cottage in the Welsh countryside. Her name was **MARY JONES.**

On Sunday mornings Mary walked to the little chapel in the village, over two miles away.

One particular Sunday the Pastor announced that a school was to open in the village. Mary thought to herself, "Now I can learn to read, and one day read the Bible."

Mary saved for six long years until she had enough money to buy a Bible.

She then decided to go a place called Bala, to buy a bible, which was about 45 kilometers away. Mary followed many paths, and crossed valleys and streams, until eventually she arrived.



She then set out to find a gentleman called Mr. Charles. She found his house and knocked on his door. As his door opened, Mary made her request for a Bible.

"This is the very last one," he told her, and held out a brand new Bible. Mary stared at it for a long moment before taking it with both hands, and expressing her heartfelt thanks.

Soon after Mary's visit Thomas Charles went to London, and he shared the story of Mary Jones with some important men. They were as moved as he was.

In **1804 the British and Foreign Bible Society was formed** by some of these people, in response to the need for Bibles, which stories like those of Mary Jones brought to light.

How much do you cherish the Bible in your hand? Do you read it every day?

As we journey in this new year, let us not forget the Word of God!



Add words from the box to finish each Bible verse. All verses are from the New International Version.

1) "In the ______________, God created the heavens and the ____________." (Genesis 1:1, NIV)

2) "Your Word is a ____________ for my feet, a light on my _____________." (Psalm 119:105)

3) "Commit to the Lord whatever you ________, and he will establish your ____________." (Proverbs 16:3)

4) "For God so ____________ the world that he gave his one and only _____________, that whoever believes in him shall not perish but have eternal __________." (John 3:16)

5) "For the __________ God gave us does not make us timid, but gives us _________, love and self-discipline." (2 Timothy 1:7)

| |
|---|
| beginning |
| do |
| earth |
| lamp |
| life |
| loved |
| path |
| plans |
| power |
| Son |
| Spirit |

## A NEW YEAR PRAYER

*"Another year is dawning;*
*Dear Father let it be,*
*In working or in waiting,*
*Another year with thee.*
*Another year of progress,*
*Another year of praise,*
*Another year of proving*
*Thy presence all the days.*
*Another year of mercies,*
*Of faithfulness and grace,*
*Another year of gladness,*
*The glory of thy face.*

*Another year of leaning*
*Upon thy loving breast,*
*Another year of trusting,*
*Of quiet, happy rest.*
*Another year of service,*
*Of witness for thy love,*
*Another year of training*
*For holier work above.*
*Another year is dawning,*
*Dear Father, let it be,*
*On earth, or else in heaven,*
*Another year for thee."*

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below…

1. The theme for the month of January is: _________________________________.
2. The biggest and Most Significant Journey Story in The Bible is______________ ______________________________________________.
3. What does the Bible say about Creation? (Gen. 1:1) _________________________________________________________________.
4. Abraham sacrificed the ram as an offering to God, and named the place – "________________________________________."
5. Mary Jones saved for __ long years, and travelled ___ kilometers to buy a bible.
6. In ________ the _________________________________ Society was formed, to make more bibles available in local languages.

Children, let our journey in this New Year 2024, be filled with the Lord's Presence and be led by the Holy Spirit.

God bless,
**Mrs. Briliya Jeyaseelan**.

## Answers to December Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – WHAT CHILD IS THIS…?

1. b. To register for taxes.
2. d. There was no room in the inn.
3. a. An angel told them to.
4. b. "God with us"
5. c. The Angels.
6. c. They followed a star.
7. c. Gold, Frankincense and Myrrh.
8. a. The King of the Jews
9. c. Worship the Child also.
10. d. Kill him.
11. b. God told them to go in a dream.
12. b. Egypt

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below…

7. The theme for the month of December is:

   ________**Advent of the Redeemer**__.

8. _**Jesus**__ is the perfect sacrifice for our sins.

9. According to John 3:16, what did God give? _**His only Son**__.

10. Name one prophet from the old testament who prophesized about Jesus' birth.

    _**Isaiah**____

11. What does Luke 2:10 say - ____**I bring you good tidings of great Joy.** _____

# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்
## (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளுடன் சம்பந்தப்பட்ட எண்களை வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து கொடுக்கப்பட்ட கணித குறியீடுகளைப் பயன்படுத்தி விடைகளை கண்டுபிடிங்கள்.**

1. கர்த்தருக்கு தன்னை உற்சாகமாய்க் கொடுத்தவனிடத்திலே இருந்த பராக்கிரமசாலிகள். ÷
2. யெப்தா பிடித்த பட்டணங்கள். ×
3. ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி கெரிசீம் மலையில் நின்ற கோத்திரங்கள். −
4. அமஞ்சி ஆட்கள். +
5. கீத வாத்தியங்களால் கர்த்தரை துதிக்கிறவர்கள். +
6. நீதிமொழிகள். −
7. பென்யமீன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள். +
8. நரிகள். +
9. வாசற் காவலாளர்களின் புத்திரரானவர்கள் −
10. பவுல் பேதுருவினிடத்தில் தங்கியிருந்த நாட்கள் = ?
11. எதனைக் குறிக்கிறது ?

***குறிப்பு :* அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.**

# டிசம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | சாமாசிபண்ணுகிற தூதனானவர் | யோபு 33:23 |
| 2 | கர்த்தர் | யூதா 1:15 |
| 3 | சாலமோன் | 1 ராஜா. 4:32 |
| 4 | முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் | வெளி. 20:6 |
| 5 | தாவீது | 1 சாமு. 18:13 |
| 6 | • சவுல் கொன்றது - தாவீது கொன்றது<br>• ஆட்டு கிடாக்கள்- ஆறுகள் | 1 சாமு. 18:7<br>மீகா 6:7 |
| 7 | ஆயிரம் வெள்ளிக்காசு | ஏசாயா 7:23 |
| 8 | எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேம் | மீகா 5:2 |
| 9 | - | யோவான் 3<br>யோவான் 3 :16 |
| 10 | ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். | லூக்கா 22 :29 |
| 11 | பெல்ஷாத்சார் | தானியேல் 5:1,30 |
| 12 | சிம்சோன் | நியா. 16:3-5 |
| 13 | ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டது. கொடுத்தது அபிமெலேக்கு | ஆதி. 20:15,16 |
| 14 | நாபால் | 1 சாமு. 25: 2, 3 |
| 15 | சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் | சங்கீதம் 50:10 |

## டிசம்பர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mr. Prawin Durai Sam
2. Mr.Emmanuel
3. Mr.Salin Robert
4. Mrs.Sheeba merlin
5. Mrs. D.R Ajita Ebi
6. Mrs. Subija Jino
7. Mrs .Priya Ranjith Kumar
8. Mrs. Abisha Grace Rejin
9. Mrs.Annie max
10. Mrs. Febell Jeevagi Thomas
11. Mrs . Sharmila Rajesh
12. Mrs.Jebaseeli Asir
13. Mrs.Geetha kannan
14. Mrs.L. Jenila
15. Mrs.Sheeba Herlin

## Children who answered December - 2023 Quiz

1. Johan Anit Manuel
2. Johan Sam Manuel
3. Liana Erin
4. Giana Elin
5. Johanan paul
6. Joanna Paul
7. Starlyng Noble
8. Evelyn Gracia
9. Steffi Priscilla
10. Jerilyn Pushpam Nelson
11. Gabrilyn Hannah Nelson
12. Jevlyn Ana .V
13. Camryn Robert. S
14. Galvin Robert .S
15. Jen Scudd
16. Jim Scott
17. Leona Juliet J.B
18. Adelyn Victoria Jeyaseelan
19. Aadhov Steve Matthew

***Note :*** ***Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



**இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி**

**14-06-1912 – 20-01-1997**

**பெரேயா ஊழியத்தின் வளர்ச்சி**

லீலா, பாக்கித்தாய், டெய்சி என ஆரம்பித்த பிள்ளைகள் பட்டியல் பிரேமா, திலகா, பத்மினி, செல்லமணி என விரிந்தது. இவர்கள் அனைவரும் தங்களை VBS ஊழியத்தில் முழு நேர ஊழியராய் இணைத்துக் கொண்ட சகோதரிகள், இவர்கள் குடியிருப்பு பெரேயா. இவர்கள் தவிர கோடை விடுமுறையில் வந்து உதவும் உதவியாளர் பட்டியலில் ராணி, லைமா, சுமதி, அலீஸ், எபன், ஆனி, பிளாண்டி, பிரிசி, பேரட், ஷீலா, பெபேயா, ஜானகி, ரோடா, சுகந்தி, ஷீலா, ஈவ்லின், ஹில்டா, ஹெப்சி, ஜோதி என ஐம்பதிற்கும் மேற்பட்ட பெயர்கள் அடங்கும்.

இந்த VBS உதவியாளர்களில் சில தனி நபர்கள், சில குடும்பஸ்தர்கள், திருமணமான உதவியாளர்களின் கணவன்மார்களும் கூட இந்த ஊழியத்தில் இணைந்து உதவி வந்தனர். J.E.P. சித்தர், விசுவாசம் சத்யா, சாம் தனசீலன், கனம் J. ஸ்டீபன், கனம் R. ஜோசப், Rev. M.S. யேசுதாசன், Rev. ஜேசன் தர்மராஜ், டாக்டர் விக்டர் துரைராஜ் போன்றோர், தங்கள் குடும்பத்தோடு தங்களை இணைத்துக்கொண்ட குடும்பத் தலைவர்களில் சிலர். ஏறக்குறைய இவர்கள் அனைவரும் ஈடித் மார்கனை மரியாதைக் கலந்த அன்புடன் மம் (MUM) என்று அழைத்தனர். இவர்கள் குழந்தைகளுக்கு ஈடித் ஒரு பாசமிகு பாட்டிமா/ஆச்சியானார். இந்த ஆச்சியை அவர்கள் 'கார் ஆச்சி' என்றே அழைத்தனர்.

பெரேயாவின் முதல்கனி லீலா வியாதியின் மத்தியிலும் விறுவிறுப்புக் குறையாமல் ஊழியம் செய்துவந்தார். இன்றைய 'கோல்கேட்' அல்லது 'க்ளோஸ் அப்' புன்முறுவல் லீலாவின் வசீகரப் புன்முறுவல் முன் இல்பொருள் என்றே சொல்லலாம். பாக்கித்தாயோ இலைமறை கனியாக மணம் பரப்பினார். மனைவியின் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத சாட்சியால் பூஜாரியாய் மத வித்தகனாய் வாழ்ந்த வேதமணி ஐயா கிறிஸ்துவின் சேவகனானான். சேலத்தில் வாழ்ந்த இந்த வேதமணி தம்பதிகளின் பெண்மக்களில் மூன்றாவதான பிரேமா பெராயாவின் பங்கானார். போதகர் S.திரவியம் ஐயா வீட்டில் அன்றைய நாட்களில் சற்று அதிகமாய்ப் படித்திருந்த திலகாவும், லீலா வேதமணியின் உறவுக் குடும்பத்தில் ஒற்றைக்கொரு பெண்ணாய் செல்லமாய் வளர்ந்த பத்மினியும் பெரேயாவின் பங்காயினர். கோத்தகிரி வில்சன் தம்பதிகளின் பிரிய மகளான செல்லமணி வேதாகமக் கல்வி முடித்தவர். இவரும் பெரேயாவின் பங்கானார். இவர்கள் அனைவரும் ஈடித்தை நாளும் பொழுதும் சுற்றி வளர்ந்த திராட்சைக் கொடிகள். பிரேமாவும், திலகாவும் கூட CSI Sisterhood-ல் அங்கமாயினர்.

கலகலப்புடனும், சுறுசுறுப்புடனும் ஊழியம் செய்த இந்த பெரேயா கண்மணிகளின் சாட்சி மற்றும் முயற்சியுடன் நெல்லை VBS கர்த்தரில் வேர்பற்றி செழுமையாய் வளர்ந்தது. வாய்க்கால் ஓரக் குடியிருப்பு இடம் போதவில்லை. இந்த வளர்ச்சி வேக நேரத்தில், "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்கு கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய் கனிக்கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான் 15:16). "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" (யோவான் 16:23) என்ற வசனங்களின் உறுதிப்பாடாய், தேவன் பெரேயா மக்களை திருவனந்தபுரம் ரோட்டிலிருந்த ஒரு வீட்டிற்கு வழிநடத்தினார்.

ஒரு மாடியுடன் கூடிய இந்த வீடு பெரிய பெரிய அறைகள் கொண்ட மாளிகையாயிருந்தது. பெரேயா வாசிகளான ஈடித், லீலா, பாக்கித்தாய், பிரேமா, திலகா, பத்மினி, செல்லமணி அனைவரது கலைத்திறனும் சங்கமிக்கவே பெரேயா புதுப்பொலிவு பெற்றது. அழகான குறைந்த விலைத்துணிகளை தேடி வாங்கி வித விதத் திரைகளாகத் தைத்து ஒலி ஊடுருவும் தனி அறைகளை உருவாக்கினர். புத்தகங்களும் பிற சாதனங்களும் அஞ்சல் வழியாய் அனுப்பப் பயன்பட்ட மரப்பெட்டிகளைக் கச்சிதமாகத் துணிகளால் அலங்காரமாய் மூடி மறைத்து மேஜை, நாற்காலிகளாக்கினர். இயற்கையையும், செடிகொடிகளையும் நேசிக்கும் ஈடித் இந்த புதிய பெரேயாவை தலைமையிடமாக சோலைவனமாக மாற்றினார்.

**- தொடரும்**

## பாடல் பிறந்த கதை

### விண்மீன் நோக்கிக் களிப்பாய் [ பாமாலை 87]

### As with gladness men of old

***'அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்'. மத்தேயு 2 : 10***



விண்மீன் நோக்கிக் களிப்பாய்
சாஸ்திரிமார்தாம் ஆவலாய்,
பின்சென்றார் அவ்வெள்ளியை
முன்நடத்தும் ஜோதியை
நேச கர்த்தா, நாங்களும்
உம்மைப் பின்செல்வோம் என்றும்.

தாழ்வாம் கொட்டில் நோக்கியே
மகிழ்வோடு விரைந்தே,
விண் மண்ணோரும் வணங்கும்
பாதம் வீழ்ந்தார் பணிந்தும்,
மனதார நாங்களும்
தேடிப் பாதம் சேரவும்.

ஆண்டவராகிய கிறிஸ்து பிறந்தபோது கீழ்நாடுகளிலிருந்து சில சாஸ்திரிகள் ஒரு நட்சத்திரத்தினால் வழிகாட்டப்பெற்று, பெத்லகேமுக்கு வந்து, குழந்தையாகிய இயேசுவைத் தொழுதுகொண்டார்கள். பேதைகளாகிய மேய்ப்பரையும், ஞானிகளையும், யூதர்களையும் மட்டுமல்ல; உலகத்திலுள்ள எல்லா மக்களையும், கடவுள் நமதாண்டவரிடம் வழிநடத்தி வருகிறார். 'கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து, தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள் (லூக்கா 13:29). இவ்வுண்மைகளை வலியுறுத்தவே, புறஜாதியாருக்குக் கிறிஸ்து வெளிப்பட்ட நாளாகிய பிரசன்னத்திருநாளை (ஜனவரி 6) திருச்சபை ஆசரிக்கிறது; கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளைப்போல நாமும் ஆண்டவரின் பாதம் தேடி, நம் சம்பத்து யாவையும் அவருக்குப் படைக்க இப்பாடலில் ஏவப்படுகிறோம். மேலும், நட்சத்திரம் அவர்களை வழிநடத்தியதுபோல, நித்திய சூரியனான இயேசு, ஜீவ பாதையில் நம்மை நடத்த அவரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

*இப்பாடலை எழுதிய வில்லியம் சாட்டர்டன் டிக்ஸ் (William Chatterton Dix) என்பவர் ஒரு மருத்துவரின் மகனாக 1837ம் ஆண்டு, ஜூன் மாதம் 14ம் தேதி, இங்கிலாந்தில் பிரிஸ்டல் நகரத்தில் பிறந்தார். இளவயதில் பிரிஸ்டல் நகரிலேயே கல்வி பயின்று, பின்னர் இன்ஷூரன்ஸ் தொழிலில் சேர்ந்து, சில ஆண்டுகளுக்குப்பின் கிளாஸ்கோ நகரில் ஓர் இன்ஷூரன்ஸ் கம்பெனியின் மேலாளராகப் பதவியேற்றார். இளவயதிலிருந்தே அவர் பக்தியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்து வந்தார்.*

*1860ம் ஆண்டு பிரசன்னத்திருநாளன்று (Epiphany Day) அவர் நோய்வாய்ப்பட்டு, ஆலய ஆராதனைக்குச் செல்ல இயலாதவராக வீட்டில் படுத்திருந்தார். ஆராதனை நேரத்தில் ஜெப புத்தகத்தை எடுத்து, அந்நாளுக்குரிய சுவிசேஷ வாக்கியத்தை (மத் 2:1-12) வாசித்துக்கொண்டிருந்தார். அவ்வசனங்களை ஆழ்ந்து சிந்திக்கவே, கிழக்கிலிருந்து நட்சத்திரத்தை கண்டு எவ்வித இன்னல்களையும் பொருட்படுத்தாது, கிறிஸ்து பாலனைத் தரிசிக்க வந்த நிகழ்ச்சி ஒரு கிறிஸ்தவனுக்கு என்னென்ன போதனைகளைக் கொடுக்கிறதெனச் சிந்தித்து, நாமும் நமது சம்பத்து யாவையும் ஆண்டவருக்குப் படைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று உணர்ந்தார். சாஸ்திரிமார்களின் யாத்திரை நாமும் பின்பற்றவேண்டிய முன்மாதிரியாக இருக்கிறதென்று அவருக்குப் புலப்பட்டது. அன்றிரவு படுத்திருக்கும்போது 'விண்மீன் நோக்கிக் களிப்பாய்' என்னும் பாடல் அவர் மனதில் உருவாகி, நித்திரைக்குப் போகுமுன் இந்த அழகிய பாடலை எழுதி முடித்தார். ஒவ்வொரு கவியின் ஆரம்பத்திலும் சாஸ்திரிமார்கள் முன்மாதிரியைக் குறிப்பிட்டு, நாம் எவ்விதம் அவர்களைப் பின்பற்றலாம் எனக் காட்டியுள்ளார்.*

*இவர் ஆங்கில மொழியைத்தவிர, கிரேக்க, எத்தியோப்பிய மொழிகளையும் கற்றிருந்தார். ஆகையால் அம்மொழிகளிலிருந்தும் பல பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவர் இயற்றிய வேறு பாடல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. அவர் 1898ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 9ம் தேதி இங்கிலாந்தில், கிளிப்டன் என்னுமிடத்தில் காலமானார்.*


# ஆலய பக்கம்



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் ஜனவரி – 2024

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | திங்கள் | 5.00 am – 7.00 am | புது வருட திருவிருந்து ஆராதனை – St.Andrew's Church |
| 2 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 5 | வெள்ளி | 8.30 pm - 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 7 | ஞாயிறு | 11.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் - ஆயர் இல்லம் |
| | | 2.00pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 9 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 12 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm - 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 13 | சனி | 9.00 am – 1.00 pm | Junior Church Retreat |
| 14 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 16 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 19 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm - 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 21 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 23 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 26 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm - 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 28 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் கூடுகை |
| 30 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | புதன் | 11.45 pm – 12.00 pm | மாத இறுதி ஜெபம் |

# BIBLE READING FOR CHILDREN – JANUARY 2024




| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.01.24 | Acts | 18 : 1- 5 |
| 2.01.24 | Acts | 18 : 6- 10 |
| 3.01.24 | Acts | 18 : 11 - 16 |
| 4.01.24 | Acts | 18 : 17 - 21 |
| 5.01.24 | Acts | 18 : 22 - 28 |
| 6.01.24 | Acts | 19 : 1 - 5 |
| 7.01.24 | Acts | 19 : 6 - 10 |
| 8.01.24 | Acts | 19 : 11 - 16 |
| 9.01.24 | Acts | 19 : 17 - 22 |
| 10.01.24 | Acts | 19 : 23 - 27 |
| 11.01.24 | Acts | 19 : 28 - 33 |
| 12.01.24 | Acts | 19 : 34 - 41 |
| 13.01.24 | Acts | 20 : 1 - 5 |
| 14.01.24 | Acts | 20 : 6 - 10 |
| 15.01.24 | Acts | 20 : 11 - 16 |
| 16.01.24 | Acts | 20 : 17 - 23 |
| 17.01.24 | Acts | 20 : 24 - 28 |
| 18.01.24 | Acts | 20 : 29 - 32 |
| 19.01.24 | Acts | 20 : 33 - 38 |
| 20.01.24 | Acts | 21 : 1 - 5 |
| 21.01.24 | Acts | 21 : 6 - 11 |
| 22.01.24 | Acts | 21 : 12 - 17 |
| 23.01.24 | Acts | 21 : 18 - 22 |
| 24.01.24 | Acts | 21 : 23 - 26 |
| 25.01.24 | Acts | 21 : 27 - 31 |
| 26.01.24 | Acts | 21 : 32 - 40 |
| 27.01.24 | Acts | 22 : 1 - 5 |
| 28.01.24 | Acts | 22 : 6 - 10 |
| 29.01.24 | Acts | 22 : 11 - 16 |
| 30.01.24 | Acts | 22 : 17 - 21 |
| 31.01.24 | Acts | 22 : 22 - 27 |



# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் ஜனவரி - 2024

| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | திங்கள் | யோசுவா 19 : 1 - 23 | 2 கொரிந்தியர் 5 : 1 - 21 |
| 2 | செவ்வாய் | யோசுவா 19 : 24 - 39 | 2 கொரிந்தியர் 6 : 1 - 18 |
| 3 | புதன் | யோசுவா 19 : 40 - 5 | 2 கொரிந்தியர் 7 : 1 - 16 |
| 4 | வியாழன் | யோசுவா 20 : 1 - 9 | 2 கொரிந்தியர் 8 : 1 - 15 |
| 5 | வெள்ளி | யோசுவா 21 : 1 - 12 | 2 கொரிந்தியர் 8 : 16 - 24 |
| 6 | சனி | யோசுவா 21 : 13 - 29 | 2 கொரிந்தியர் 9 : 1 - 15 |
| 7 | ஞாயிறு | யோசுவா 21 : 30 - 45 | 2 கொரிந்தியர் 10 : 1 - 18 |
| 8 | திங்கள் | யோசுவா 22 : 1 - 11 | 2 கொரிந்தியர் 11 : 1 - 19 |
| 9 | செவ்வாய் | யோசுவா 22 : 12 - 20 | 2 கொரிந்தியர் 11 : 20 - 33 |
| 10 | புதன் | யோசுவா 22 : 21 - 28 | 2 கொரிந்தியர் 12 : 1 - 10 |
| 11 | வியாழன் | யோசுவா 22 : 29 - 34 | 2 கொரிந்தியர் 12 : 11 - 21 |
| 12 | வெள்ளி | யோசுவா 23 : 1 - 16 | 2 கொரிந்தியர் 13 : 1 - 15 |
| 13 | சனி | யோசுவா 24 : 1 - 15 | கலாத்தியர் 1 : 1 - 11 |
| 14 | ஞாயிறு | யோசுவா 24 : 16 - 33 | கலாத்தியர் 1 : 12 - 24 |
| 15 | திங்கள் | நியா. 1 : 1 - 15 | கலாத்தியர் 2 : 1 - 10 |
| 16 | செவ்வாய் | நியா. 1 : 16 - 27 | கலாத்தியர் 2 : 11 - 21 |
| 17 | புதன் | நியா . 1 : 28 - 36 | கலாத்தியர் 3 : 1 - 14 |
| 18 | வியாழன் | நியா . 2 : 1 - 14 | கலாத்தியர் 3 : 15 - 29 |
| 19 | வெள்ளி | நியா. 2 : 15 - 23 | கலாத்தியர் 4 : 1 - 18 |
| 20 | சனி | நியா. 3 : 1 - 15 | கலாத்தியர் 4 : 19 - 31 |
| 21 | ஞாயிறு | நியா. 3 : 16 - 31 | கலாத்தியர் 5 : 1 - 13 |
| 22 | திங்கள் | நியா. 4 : 1 - 13 | கலாத்தியர் 5 : 14 - 26 |
| 23 | செவ்வாய் | நியா . 4 : 14 - 24 | கலாத்தியர் 6 : 1 - 18 |
| 24 | புதன் | நியா . 5 : 1 - 19 | எபேசியர் 1 : 1 - 12 |
| 25 | வியாழன் | நியா . 5 : 20 - 31 | எபேசியர் 1 : 13 - 22 |
| 26 | வெள்ளி | நியா. 6: 1 - 14 | எபேசியர் 2 : 1 - 10 |
| 27 | சனி | நியா. 6: 15 - 29 | எபேசியர் 2 : 11 - 22 |
| 28 | ஞாயிறு | நியா. 6: 30 - 40 | எபேசியர் 3 : 1 - 11 |
| 29 | திங்கள் | நியா. 7 : 1 - 13 | எபேசியர் 3 : 12 - 21 |
| 30 | செவ்வாய் | நியா. 7 : 14 - 25 | எபேசியர் 4 : 1 - 15 |
| 31 | புதன் | நியா. 8 : 1 - 18 | எபேசியர் 4 : 16 - 32 |

# ஆராதனை பாடல்கள் - ஜனவரி 2024



| புத்தாண்டு ஆராதனை - 01 – 01 - 24 | |
|---|---|
| பாமாலை - 253 | கர்த்தாவே யுகயுகமாய் |
| பாமாலை - 320 | என் முன்னே மேய்ப்பர் |
| கீர்த்தனை – 302 | ஆனந்தமே ஜெயா ஜெயா |
| பாமாலை - 324 | பாதை காட்டும் மா யெகோவா |
| **05-01-24** | |
| பாமாலை - 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை – 306 | தூய்மை பெற நாடு |
| கீர்த்தனை – 221 | ஆண்டவரின் நாமமதை |
| பாமாலை - 33 | இந்நாள் வரைக்கும் கர்த்தரே |
| **12-01-24** | |
| பாமாலை - 21 | சேனையின் கர்த்தா |
| பாமாலை - 18 | எங்கும் நிறைந்த தெய்வமே |
| கீர்த்தனை – 385 | உன்னதமானவரின் |
| பாமாலை - 36 | என்னோடிரும் மா நேச கர்த்தரே |
| **19-01-24** | |
| பாமாலை - 367 | ஆண்டவா பிரசன்னமாகி |
| பாமாலை - 170 | ஆ சகோதரர் ஒன்றாய் |
| கீர்த்தனை – 217 | அன்பே பிரதானம் |
| முடிவு கவிகள் - 4 | தெய்வ ஆசீர்வாதத்தோடே |
| **26-01-24** | |
| பாமாலை - 31 | கீழ் வான கோடியின் |
| பாமாலை - 243 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை – 6 | சீர்மிகு வான்புவி தேவா தோத்ரம் |
| பாமாலை - 37 | ஞான நாதா, வானம் பூமி |

## திருமறை பாட ஒழுங்குகள் - ஜனவரி 2024

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-01-24 | தடைகளை நீக்கிப் போடுகிறவர் முன் செல்கிறார் | யாத். 33:8-14 | எபே. 1: 1-14 | லூக்கா 12:22-32 | 65 |
| 05-01-24 | அழைப்பிற்கேற்ப வாழுதல் | ஆதி. 12:1 – 8 | 1 பேதுரு 1:13-25 | யோவான் 1:35-51 | - |
| 12-01-24 | கடவுளின் வெளிப்பாடு | ஏசாயா 45:1 – 8 | எபேசியர் 3:1 – 12 | லூக்கா 2:22-32 | 67 |
| 19-01-24 | அமைதிக்காக ஒன்றுபடுதல் | எசேக்கியேல் 37:15 - 28 | பிலி. 4:8-20 | மத்தேயு 5:1 - 16 | - |
| 26-01-24 | படைப்பின் மேன்மை | ஆதி. 1 : 24 - 31 | ரோமர் 8:16 - 30 | மத்தேயு 6:24 - 34 | 104:1-14 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 02-01-24 | சங்கீதம் | 119:16-32 | Muroor |
| 09-01-24 | சங்கீதம் | 119:33-48 | Musaafa |
| 16-01-24 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 23-01-24 | சங்கீதம் | 119:49-64 | TCA |
| 30-01-24 | சங்கீதம் | 119:65-80 | Al Wadha |

## NEW ARRIVAL



இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். சங்.127.4a

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Janita Princess | Mr. Sam John & Mrs. Jancy Rani |

## Birthday - January

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Newline Selvakumari |
| 2 | Mrs. | Annie Shelton Sam |
| 5 | Mrs. | Mathi Malar |
| 6 | Mrs. | Ezhil |
| 6 | Mrs. | Preethi S |
| 7 | Mr. | Selvin Samuel |
| 8 | Ms. | Joanna R.S. |
| 8 | Mr. | Jenson Soundar Raj K |
| 9 | Miss. | Juwana Steffi P |
| 9 | Mrs. | Angelin Prasanna |
| 9 | Master. | Vimal Melwyn. R |
| 10 | Mrs. | Thamarai Selvi |
| 11 | Mr. | Paul Emerson Karunakaran |
| 12 | Mrs. | Nanthini Rajkumar |
| 13 | Miss. | Joanna Paul Jino |
| 13 | Mrs. | Ruby Sahaya Selvan |
| 15 | Mrs. | Jeba Samuel |
| 15 | Master | Uday Saul |

## Birthday - January




| Birth Date | Title | Name |
|---|---|---|
| **15** | Mr. | Judson Sundaradhas |
| **16** | Mrs. | Adeline Crishanth |
| **16** | Mrs. | Desigta Thomas |
| **17** | Mrs. Dr. | Savitha Rajakumar |
| **17** | Mrs. | Peppin Bright |
| **19** | Ms. | Joha Anit Manuel |
| **20** | Mrs. | Epsy Janet Bai |
| **20** | Master. | Jershan Selva Shaji |
| **21** | Mrs. | Princy Catherine |
| **23** | Master. | Giftus Samuel |
| **24** | Ms. | Caron Sylvia |
| **25** | Mrs. | Vidhya Jebas |
| **25** | Mr. | Jebakumar Benjamin |
| **25** | Mrs. | Latha Santhosamani |
| **25** | Mrs. | Sharon Deborah P |
| **26** | Mr. | Galvin Robert |
| **27** | Ms | J. D. Merlin Deva Kirubi |
| **29** | Mr. | Dhas Devavaram Jackson |
| **29** | Baby. | Johan Sam Manuel |
| **30** | Ms. | Elizabeth Miraclyn |
| **30** | Mrs. | Juliet Vanitha |
| **31** | Mrs. | Agnes Regini Arun |
| **31** | Baby | Giselle Benny |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| **1** | Michael G | 468 |
| **2** | Richard Immanuel | 469 |
| **3** | Selvamalar Raviraj | 470 |
| **4** | Jenson Soundar Raj K | 471 |

## WEDDING ANNIVERSARY – JANUARY




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 3 | Mr. & Mrs. | Melwin Joseph |
| 3 | Mr. & Mrs. | Stephenson |
| 4 | Mr. & Mrs. | Solomon Susinder |
| 5 | Mr. & Mrs. | Raja. A.K |
| 6 | Mr. & Mrs. | Renald Daniel R |
| 9 | Mr. & Mrs. | Jose Joseph Raj |
| 9 | Mr. & Mrs. | Benny Emmanuel |
| 10 | Mr. & Mrs. | Sathia Saul Raj  P S |
| 11 | Mr. & Mrs. | Jenson Soundar Raj K |
| 11 | Mr. & Mrs. | Jacob Raj. J |
| 17 | Mr. & Mrs. | Dhas Devavaram Jackson |
| 19 | Mr. & Mrs. | Praveen Sharon |
| 21 | Mr. & Mrs. | Johnson Prabu |
| 22 | Mr. & Mrs. | Samuel Bhaskar W |
| 25 | Mr. & Mrs. | Vimal Mohan |
| 26 | Mr. & Mrs. | Yuvesh Ray |
| 26 | Mr. & Mrs. | Rajan Sagariya Nadar |
| 26 | Mr. & Mrs. | Ansel Regi |
| 31 | Mr. & Mrs. | Sahaya Selvan |
| 31 | Mr. & Mrs. | Dinakaran |



**Farewell to Mr. Dinakaran & Family**



















## JUNIOR CHURCH – CHRISTMAS TREE PROGRAMME




CSI Tamil parish Abu Dhabi Choir



Carols by women's fellowship

## CAROL SERVICE



Madinat Zayed church choir




Ruwais church choir



Carols by committee members


Happy New Year
2024


Jesus is the Breaker!
The Breaker goes up before them; they break out, pass through the gate, and go out by it. So their King goes on before them, and the LORD at their head.
Micah 2:13